## சேலம் கல்வராயன் மலை அரசு பழங்குடியினர் உண்டி உறைவிடப் பள்ளியில் பயின்று -

# சென்னை - ஐ.ஐ.டி.யில் பயில வாய்ப்பு பெற்ற ஏழை மாணவி, ஆர்.இராஜேஸ்வரி!

### ‘உயர்கல்விச் செலவை அரசு ஏற்கும்’ என அறிவித்து - சேலத்தில் நேரில் அழைத்துப் பாராட்டிய முதல்வர் -

### அரசு சார்பில் வீட்டுக்கான ஆணையும் வழங்கினார்! மாணவி ராஜேஸ்வரி நன்றி!

**சென்னை, ஜூன்.14–**

**முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் சேலம் கல்ராயன் மலை அரசு பழங்குடியினர் உண்டி உறைவிட மேல்நிலைப் பள்ளியில் பயின்று அகில இந்திய தேர்வில் தேர்ச்சி பெற்று சென்னை ஐ.ஐ.டி.யில் படிக்கும் வாய்ப்பைப் பெற்றுள்ள ஏழை மாணவி ஆ.ராஜேஸ்வரியை சேலம் நிகழ்ச்சியின்போது நேரில் அழைத்துப் பாராட்டினார்! அவரது உயர்கல்விச் செலவை அரசு ஏற்கும் என்றும் அரசு சார்பில் வீடு ஒன்று வழங்குவதாகவும் அறிவித்து ஆணைகள் வழங்கி வாழ்த்தினார்!**



சேலம், கருமந்துறை அரசு பழங்குடியினர் உண்டி உறைவிட மேல்நிலைப் பள்ளியில் பயின்று அகில இந்திய தேர்வில் தேர்ச்சி பெற்று IIT சென்னையில் உயர்கல்வி பயில தகுதிப் பெற்று சாதனை படைத்துள்ள கல்வராயன்மலை கருமந்துறை பகுதியைச் சேர்ந்த பழங்குடியின மாணவி.ஆ.ராஜேஸ்வரி

முதலமைச்சர் அவர்கள் மாணவ, மாணவியர்கள் கல்வியில் சிறந்து விளங்கிடும் வகையில் காலை உணவுத் திட்டம், புதுமைப் பெண், தமிழ்ப் புதல்வன், நான் முதல்வன் உள்ளிட்ட பல்வேறு சிறப்பான திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறார்கள். குறிப்பாக, பெண் கல்வி முன்னேற்றத்திற்காக புதுமைப்பெண் திட்டத்தின் மூலம் 6 முதல் 12 ஆம் வகுப்பு வரை அரசு பள்ளியில் பயின்று உயர்கல்வி பயிலும் மாணவியருக்கு மாதம் ரூ.1,000 வழங்கி வருகிறார்கள்.

முதலமைச்சர் அவர்களின் சிறப்பான இத்திட்டங்களின் பலனாக அனைத்துதரப்பு மாணவ, மாணவியர்களுக்கும் சிறப்பான கல்வி வழங்கப்பட்டு வருவதுடன், தேசிய அளவில் உயர்கல்வி சேர்க்கையில் தமிழ்நாடு 49 சதவீதம் என்ற அளவில் இந்தியாவிலேயே முதல் இடத்தில் உள்ளது.

சேலம் மாவட்டம், கல்ராயன்மலையை சேர்ந்த கருமந்துறை, அரசு பழங்குடியினர் உண்டி உறைவிட மேல்நிலைப்பள்ளியில் பயின்ற ஆ.ராஜேஸ்வரி என்ற பழங்குடியின மாணவி அண்மையில் நடைபெற்ற ஜே.இ.இ. தேர்வில் அகில இந்திய அளவில் 417 வது இடத்தில் தேர்ச்சி பெற்று சென்னை ஐ.ஐ.டி.யில் உயர் கல்வி பயில தகுதி பெற்றுள்ளது பாராட்டுக்குரிய சாதனையாகும்.

மலைவாழ் இன ஏழை குடும்பத்தைச் சேர்ந்த மாணவி ஆ.ராஜேஸ்வரியின் தந்தை கடந்த 2023-ல் உடல்நல குறைபாடு காரணமாக இறந்துவிட்டார். தாயார் திருமதி.ஆ.கவிதா, அக்கா ஜெகதீஸ்வரி, அண்ணன் ஸ்ரீ கணேஷ் ஆகியோருடன் கருமந்துறை மலைப்பகுதியில் வசித்து வருகிறார்.

சிறுவயதிலிருந்தே படிப்பில் சிறந்து விளங்கிய மாணவி ஆ.ராஜேஸ்வரி 10ஆம் வகுப்பில் 438 மதிப்பெண்களும், 12ஆம் வகுப்பில் 600க்கு 521 மதிப்பெண்களும் பெற்று தேர்ச்சியடைந்துள்ளார். ஆ.ராஜேஸ்வரி தனது பள்ளி தலைமை ஆசிரியர் வழிகாட்டுதலின்படி பழங்குடியின நலத்துறையின் சிறப்பு வகுப்புகளிலும், ஈரோடு மாவட்டம், பெருந்துறையில் செயல்பட்டு வரும் அரசு பயிற்சி மையத்திலும் சேர்ந்து உயர்கல்வி நுழைவுத் தேர்விற்கு தயாராகி வந்தார்.

இந்நிலையில் JEE Mains & JEE Advance தேர்வுகளில் தேர்ச்சி பெற்று அகில இந்திய அளவில் 417 - வது இடத்தில் தேர்ச்சி பெற்று சென்னை ஐ.ஐ.டி.யில் பயில தகுதி பெற்றுள்ளார்.

மேலும் JEE Advanced தொடர்பான கவுன்சிலிங்கிற்காக தற்போது குமிழி ஏகலைவா உண்டி உறைவிட மாதிரி மேல்நிலைப்பள்ளியில் பழங்குடியினர் நலத்துறை மூலம் வாசுகி பவுண்டேசன் மூலம் நடத்தப்படும் உயர்கல்விக்கான பயிற்சி பெற்று வருகிறார். இவர் சென்னை ஐ.ஐ.டி.யில் Aerospace Engineering பாடப்பிரிவில் உயர்கல்வி பயில விருப்பம் தெரிவித்துள்ளார்.

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் மாணவி ஆ.ராஜேஸ்வரி சென்னை ஐ.ஐ.டி.யில் உயர்கல்வி பயில தகுதி பெற்றுள்ளதை அறிந்தவுடன், ‘மாணவி ஆ.ராஜேஸ்வரிக்கு எனது Salute’ எனப் பாராட்டி வாழ்த்துத் தெரிவித்து, “அவரது உயர்கல்விச் செலவை தமிழ்நாடு அரசே ஏற்கும்” என அறிவித்தார்.

இதைனைத் தொடர்ந்து, முதலமைச்சர் அவர்கள் 12.6.2025 அன்று சேலம் மாவட்ட சுற்றுப் பயணத்தின்போது, பழங்குடியின மாணவி ஆ.ராஜேஷ்வரியை நேரில் அழைத்து பொன்னாடை அணிவித்து சிறப்பு செய்து, பழங்குடியினர் நலத்துறையின் தொல்குடித் திட்டத்தின் கீழ் ரூ.5.73 இலட்சம் மதிப்பிலான வீடு ஒதுக்கீடு செய்து அதற்கான ஆணையினையும், உயர்கல்வி பயில்வதற்கு உதவிடும் வகையில் ரூ.70,000 மதிப்பிலான மடிக்கணினியையும் வழங்கி வாழ்த்து தெரிவித்தார்.

பழங்குடியின மக்களுக்காக பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வரும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் திராவிட மாடல் அரசின் சாதனைக்கு முத்தாய்ப்பாக மாணவி ராஜேஷ்வரியின் சாதனை அமைந்துள்ளது என்றால் அது மிகையாகாது.

**முதல்வர் மு.க.ஸ்டாலினுக்கு மாணவி ஆ.ராஜேஸ்வரி நன்றி!**

முதலமைச்சர் அவர்கள் நான் IIT- ல் பயில தகுதி பெற்றுள்ளயொட்டி எனக்கு வாழ்த்து தெரிவித்து மேற்படிப்பிற்கான செலவுகளை அரசே ஏற்கும் என அறிவித்தார்கள். அது மட்டுமல்லாமல், 12.6.2025 அன்று சேலத்திற்கு வருகை தந்த தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் என்னை நேரில் அழைத்து பாராட்டி, எனது உயர்கல்விக்கு உதவிடும் வகையில் மடிக்கணினியினை வழங்கியுள்ளார்கள். மேலும் வீடு கட்டிக்கொடுப்பதற்கான ஆணையும் வழங்கியுள்ளார்கள். நன்றாக பயின்று இந்திய விண்வெளி ஆராய்ச்சி நிறுவனத்தில் பணியில் சேர்ந்து தமிழ்நாட்டிற்கு பெருமை சேர்ப்பேன் என இத்தருணத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.

முதலமைச்சர் அவர்கள், தந்தை இல்லாத எனக்கு தந்தையாக எனது உயர் கல்விச் செலவை ஏற்பதும், வீடு வழங்கியுள்ளதும் மிகவும் மகிழ்ச்சியாக உள்ளது. முதலமைச்சர் அவர்களுக்கு எனது மனமார்ந்த நன்றியினை தெரிவித்துக்கொள்கிறேன் என்று நெகிழ்ச்சியுடன் கூறியுள்ளார்.

---

## அகமதாபாத்திலிருந்து புறப்பட்ட விமானம் கோர விபத்து! 241 பயணிகள் பலி!

# இதுபோல் இனி நடக்காவண்ணம் தடுப்பு - பாதுகாப்பு வழிமுறைகள் தேவை!

### திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அறிக்கை!

*சென்னை, ஜூன் 14-*

அகமதாபாத் பன்னாட்டு விமான நிலையத்திலிருந்து புறப்பட்ட விமானம், எதிர்பாரா விபத்துக் காரணமாக ஏற்பட்ட உயிரிழப்புக்கு இரங்கல் தெரிவித்தும், இனி இதுபோன்ற விபத்துகள் நேராவண்ணம் உரிய தடுப்புக்கான, பாதுகாப்பு வழிமுறைகளைச் செய்வது அவசர, அவசியமாகும் என்று திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அவர்கள் விடுத்துள்ள அவரது அறிக்கை வருமாறு:



இந்தியாவின் வரலாற்றில் மிகவும் வேதனையும், துயரமும் தந்த கருப்பு நாள் - 12.6.2025!

குஜராத் மாநில அகமதாபாத் பன்னாட்டு விமான நிலையத்திலிருந்து 242 பயணிகளை ஏற்றிக்கொண்டு லண்டனுக்குப் புறப்பட்ட ஏர் இந்தியா போயிங் விமானம் சில நிமிடங்களுக்குள், விமானக் கோளாறு காரணமாக, அதன் விமானி கட்டுப்பாட்டு அறைக்கு, “உயிருக்கு ஆபத்து, உதவுங்கள் (‘May--Day’)” என்று உதவி கேட்டு அழைத்துள்ளார். அதை ஏற்றுக்கொண்ட கட்டுப்பாட்டு அறை அதிகாரிகள், மீண்டும் விமானியைத் தொடர்பு கொள்ள முயன்றனர். ஆனால், அதற்குள் விமானத்தின் தகவல் தொடர்பு துண்டிக்கப்பட்டது. விமானமானது, சில நிமிடங்களில் கட்டுப்பாட்டை இழந்து அந்த விமானம் நிலைய அருகில் மெகானி என்ற இடத்தில் உள்ள தனியார் மருத்துவக் கல்லூரி விடுதியின் கட்டடத்தின்மீது விழுந்து பயங்கர சத்தத்துடன் வெடித்துச் சிதறியது.

இதனால் விமானத்தில் பயணம் செய்த 242 பேரில், 241 பேரும், மருத்துவக் கல்லூரி மாணவர் விடுதியில் உணவருந்திக் கொண்டிருந்த மாணவர்கள் 5 பேரும் உயிரிழந்த கொடுமை நிகழ்ந்துள்ளது.

**எளிதில் மீள முடியாத அதிர்ச்சித் தகவல்!**

இலண்டனில் உள்ள தனது மகளைப் பார்க்கப் புறப்பட்ட குஜராத் மேனாள் முதலமைச்சர் விஜய் ரூபானி உள்பட 241 பேர் உடல் கருகி இறந்துள்ளது கொடுமையிலும் கொடுமை!

‘விபத்து’ என்பது எங்கும், எதிர்பாராமல் கண் இமைக்கும் சில நிமிடங்களில் ஏற்படக் கூடியதே என்றாலும், இப்படி ஒரு கோரம்!

‘விமானத்தின் கருப்புப் பெட்டி’ கிடைத்துள்ளது. அதிலிருந்து கூடுதல் தகவல்கள் கிடைக்கக் கூடும்!

‘ஏர் இந்தியா’ விமான சேவையின் நம்பகத் தன்மை, அண்மைக்காலத்தில் விமானப் பயணிகளிடம் வெகுவாகக் குறைந்து வரும் நிலையில், இந்த விமான விபத்து, அதனை மேலும் பல மடங்கு பெருக்கியுள்ளது.

**சரியான பாதுகாப்பு ஏற்பாடுகள் தேவை!**

இதுபற்றி சரியான நீதி விசாரணை நடத்தப்பட்டு, எதிர்காலத்தில் இது போன்று நடக்காவண்ணம் உரிய தடுப்புக்கான பாதுகாப்பு வழிமுறைகளைச் செய்வது அவசர அவசியமாகும்.

மறைந்த மனித உறவுகளுக்கு நமது ஆழ்ந்த இரங்கலும், இறந்தவர்களின் குடும்பத்தினருக்கு ஆறுதலும் உரித்தாகுக!

இவ்வாறு அவர் தமது அறிக்கையில் கூறியுள்ளார்.

---

## பகுதிச் செயலாளர் தி.மு.தனியரசு முன்னிலையில் – திருவொற்றியூர்

# 12வது வட்ட பாக முகவர்கள் பி.எல்.ஏ.-2 - பி.எல்.சி. ஆலோசனை -ஆய்வுக் கூட்டம்!

### எஸ்.மோகன் ஆலோசனை வழங்கினார்! க.வீ.சதிஷ்குமார் ஏற்பாடு!

*சென்னை, ஜூன்.13*

தமிழ்நாடு முதலமைச்சர் கழக தலைவர் தளபதி அவர்களின் ஆணைக்கிணங்க, தமிழ்நாடு துணை முதலமைச்சர் கழக இளைஞர் அணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதலின் படி, சென்னை வடகிழக்கு மாவட்டம் திருவொற்றியூர் கிழக்கு பகுதி 12வது வட்டக் கழகம் சார்பில் சென்னை வடகிழக்கு மாவட்ட கழக செயலாளர் மாதவரம் எஸ்.சுதர்சனம் எம்.எல்.ஏ. ஆலோசனையின்படி திருவொற்றியூர் கிழக்கு பகுதி செயலாளர் மாநகராட்சி மண்டல குழு தலைவர் தி.மு.தனியரசு தலைமையில் 12வது வட்ட கழக செயலாளர் க.வீ.சதிஷ்குமார் ஏற்பாட்டில் 11-6-2025 புதன்கிழமை இரவு 8 மணிக்கு பாக-முகவர்கள் BLA-2 / BLC ஆலோசனை மற்றும் ஆய்வு கூட்டம் நடைபெற்றது.

இதில் திருவொற்றியூர் தொகுதி பொறுப்பாளர், மாநில வர்த்தகர் அணி துணை செயலாளர் தி.நகர் எஸ்.மோகன் கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றினார்.

இதில் 2026 சட்டமன்ற தேர்தல் குறித்தும், கழக ஆக்கப் பணிகள், திண்ணை பிரச்சாரங்கள், உறுப்பினர்கள் சேர்த்தல், எவ்வாறு வாக்குகள் பெறுவது போன்ற ஆலோசனைகள் வழங்கப்பட்டது.

இந்நிகழ்ச்சியில் சென்னை வடகிழக்கு மாவட்ட அவைத்தலைவர் குறிஞ்சி எஸ்.கணேசன், பொதுக்குழு உறுப்பினர் இரா.முருகேசன், டி.ஏ.ராஜ், கிழக்கு பகுதி அவை தலைவர் ஆர்.சி.ஆசைதம்பி, கிழக்கு பகுதி துணை செயலாளர் எம்.வி.குமார், கே.பிரபாவதி, பொருளாளர் இரா.குமரேசன், எஸ்.பாஸ்கர், பி.எஸ்.சைலஸ், ம.ஜெயராமன், வட்ட செயலாளர் எம்.எல்.சரவணன் மற்றும் மாவட்ட அணியின் நிர்வாகிகள், பாக-முகவர்கள், கழக மூத்த முன்னோடிகள், கழக தோழர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

---

## டி.முரளி கிருஷ்ணன் தலைமையில் – ஆ.கிருஷ்ணசாமி எம்.எல்.ஏ. முன்னிலையில் – மறைந்த

# ஒன்றியச் செயலாளர் புஜ்ஜி டி.ராமகிருஷ்ணன் படத்திறப்பு!

### அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் திறந்து வைக்கிறார்!

*திருவள்ளூர் ஜூன் 14;-*



திருவள்ளூர் மத்திய மாவட்டம் திருவள்ளூர் வடக்கு ஒன்றிய கழகச் செயலாளர் முன்னாள் மாவட்ட துணை செயலாளர் முன்னாள் ஒன்றிய குழு உறுப்பினருமான புஜ்ஜி. டி.ராமகிருஷ்ணன் அவர்களின் 13 வது நாள் நினைவஞ்சலி மற்றும் படத்திறப்பு நிகழ்ச்சி நாளை (15-06-2025 ஞாயிற்றுக்கிழமை) காலை 8 மணி அளவில் வெளியூர் ஊராட்சியில் உள்ள ராமராஜ கண்டிகையில் நடைபெறுகிறது இதில் மாவட்ட வர்த்தக அணி துணை அமைப்பாளர் டி.முரளி கிருஷ்ணன் தலைமை தாங்கினார் பூந்தமல்லி சட்ட மன்ற உறுப்பினர் ஆ.கிருஷ்ண சாமி ஒன்றிய கழக நிர்வாகிகள் பரகத்துல்லா கான், தென்னவன், மனோகரன், மதுரை வீரன், விமலா குமார் பிராங்கிளின், வேலாயுதம் முகமது ரபிக், மாவட்ட அணிகளின் நிர்வாகிகள் சங்கீதா சீனிவாசன், பி.கே.இ. கபிலன், வி.ஜே. உமா மகேஸ்வரன், ஆர்.கருணாகரன் நாகராஜன், ஹரி கிருஷ்ணன் பாலாஜி, தமிழ்வாணன், சரத் பாபு, ஜஸ்டின் பால், பலராமன், சந்தோஷ், வேலு ஆகியோர் முன்னிலை வகிக்கிறார்கள்.

இதில் சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் ஆவடி சா.மு.நாசர் கலந்து கொண்டு திருவுவ படத்தை திறந்து வைத்து அஞ்சலி செலுத்துகிறார்.

இதில் மாவட்ட கழக செயலாளர் எஸ். சந்திரன் எம்.எல்.ஏ, வல்லூர் எம்.எஸ். கே.ரமேஷ் ராஜ், சட்டமன்ற உறுப்பினர்கள் விஜி.ராஜேந்திரன், ஐ.பரந்தாமன் முன்னாள் எம்எல்ஏ ப. ரங்கநாதன், மாநில மாவட்ட கழக நிர்வாகிகள் கே.ஜெ.ரமேஷ், சி.ஜெரால்டு, பிரபு கஜேந்திரன், ஜெ.மூர்த்தி, சி.எச்.சேகர், திருத்தணி எம்.பூபதி, ஆர்.டி.இ.ஆதிசேசன், ஜி.உதயகுமார், பி.டி.சி.செல்வராஜ், ம.ராஜ், வி.ஜெ.சீனிவாசன், எஸ்.ஜெயபாலன், காயத்திரி ஸ்ரீதர், பா.நரேஷ்குமார், த.எத்திராஜ் ஜி. ராஜேந்திரன், ஜி.விமல் வர்ஷன், கே.திராவிட பக்தன், மு.பகலவன், முத்து தமிழ் செல்வன், வி.குமார், ஜெ.மகாதேவன் காஞ்சனா சுதாகர், எஸ். சங்கர், கே.வி.ஜி.உமா மகேஸ்வரி, டாக்டர் வி.சி.ஆர்.குமரன், மு.கதிரவன், ப.சிட்டிபாபு எஸ்..மூர்த்தி, எஸ்.கே.ஆதாம், மாநகர ஒன்றிய நகர பேரூர் கழக செயலாளர்கள் மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் நிர்வாகிகள் கிளைக் கழக செயலாளர்கள் கழக இந்நாள் முன்னாள் நிர்வாகிகள் அனைவரும் கலந்து கொள்கிறார்கள்.

---



தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை அமைச்சர் மு. பெ. சாமிநாதன், இந்து சமயம் மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் பி.கே.சேகர்பாபு ஆகியோர் நேற்று (13.06.2025) சென்னை, தண்டையார்பேட்டை காமராஜர் நகரில் எழுதுபொருள் மற்றும் அச்சுத் துறையின் சார்பில் அரசு அச்சக பணியாளர்களுக்காக புதிதாக கட்டப்பட்டு வரும் குடியிருப்புகளை நேரில் பார்வையிட்டு ஆய்வு செய்தார்கள். இந்நிகழ்வில் பெருநகர சென்னை மாநகராட்சி மேயர் ஆர். பிரியா, நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் கலாநிதி வீரசாமி, சட்டமன்ற உறுப்பினர்கள் ஆர்.டி.சேகர், ஜே.ஜே.எபினேசர், எழுதுபொருள் மற்றும் அச்சுத்துறை ஆணையர் வெ.ஷோபனா, தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறை செயலாளர் வே. ராஜாராமன், சென்னை மாவட்ட ஆட்சித்தலைவர் ரஷ்மி சித்தார்த் ஜகடே மற்றும் பொது பணித் துறை அலுவலர்கள் உடனிருந்தனர்.

---


ஆறாம் ஆண்டு

## நினைவு அஞ்சலி





தோற்றம் 10.09.1937

மறைவு 14.06.2019

முன்னாள் பெரம்பலூர் மாவட்ட கழக செயலாளர்

முன்னாள் பாராளுமன்ற மேலவை உறுப்பினர்

## எஸ்.சிவசுப்ரமணியன் MA.,BL.,

வருத்தத்துடன்

— அரியலூர் மாவட்ட தி.மு.க —